RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023- 2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-92 | 09 ஏப்ரல் | புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## உச்ச நீதிமன்றம் அதிருப்தி: டாஸ்மாக் வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்றக் கோரிய தமிழக அரசின் மனு வாபஸ்!

புதுடெல்லி, ஏப்.9

டாஸ்மாக் நிறுவனத்தில் நடத்தப்பட்ட அமலாக்கத்துறை சோதனைக்கு எதிரான வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்றக் கோரி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை தமிழக அரசு திரும்பப் பெற்றது. உச்ச நீதிமன்றத்தின் அதிருப்தியின் எதிரொலியாக, தமிழக அரசு மனுவை வாபஸ் பெற்றது.



டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் அமலாக்கத் துறை கடந்த மாதம் 6ம் தேதி முதல் 8ம் தேதி வரை நடத்திய சோதனையை சட்டவிரோதம் என அறிவிக்கக் கோரியும், விசாரணை என்ற பெயரில் டாஸ்மாக் அதிகாரிகளை துன்புறுத்தக் கூடாது என தடை விதிக்கக் கோரியும் தமிழக அரசு மற்றும் டாஸ்மாக் நிர்வாகம் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இந்த வழக்குகளை ஏற்கெனவே விசாரித்த நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், என்.செந்தில்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு, அமலாக்கத் துறையின் மேல்நடவடிக்கைக்கு இடைக்காலத் தடை விதித்திருந்தனர்.

நீதிபதிகள் விலகல்: இந்த வழக்கு விசாரணையில் இருந்து நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், என்.செந்தில்குமார் ஆகியோர் விலகியதை அடுத்து, இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், கே.ராஜசேகர் ஆகியோர் அடங்கிய அமர்வு, அமலாக்கத் துறையின் பதில் மனுவுக்கு, தமிழக அரசு தரப்பில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஏப்.28ம் தேதிக்கு தள்ளி வைத்திருந்தனர்.

இந்நிலையில், நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், கே.ராஜசேகர் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று (ஏப்.8) டாஸ்மாக் வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது, "தமிழக அரசு தரப்பில், இந்த விவகாரம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளதால், வழக்கை தள்ளிவைக்க வேணடும்," என கோரிக்கை வைக்கபட்டது.

அப்போது நீதிபதிகள், "வழக்கு விசாரணைக்கு வந்தபோதே உச்ச நீதிமன்றம் செல்வதாக கூறியிருந்தால், வழக்கை நாங்கள் பட்டியிலிட்டிருக்க மாட்டோம். இதன் மூலம் நீங்கள் நீதிமன்றத்தை இழிவுபடுத்திவிட்டீர்கள். குறைந்தபட்சம் நீதிமன்றத்துக்காவது நேர்மையாக இருக்க வேண்டும் என அரசுக்கு கண்டனம் தெரிவித்தனர். மேலும், இந்த மனு பொது நலனுக்காக தாக்கல் செய்யப்பட்டதா? அல்லது டாஸ்மாக் அதிகாரிகள் சிலரை காப்பாற்றுவதற்காக தாக்கல் செய்யபட்டதா?" என தமிழக அரசுக்கு கேள்வி எழுப்பினர்.

அப்போது அரசுத் தரப்பில், மாநில அரசின் உரிமைக்காகவே மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும், மனு தாக்கல் செய்ய எங்களுக்கு உரிமை உள்ளதாகவும் தெரிவிக்கபட்டது. இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவில்லை என்றால் பிற்பகல் வாதங்களை முன்வைக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்திருந்தனர்.

உச்ச நீதிமன்றத்தில் வாபஸ்: இந்நிலையில், டாஸ்மாக் விவகாரம் தொடர்பான வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்றக் கோரி தமிழக அரசு தாக்கல் செய்த வழக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் தலையிட மறுத்த உச்ச நீதிமன்றம், டாஸ்மாக் விவகாரத்தில் சென்னை உயர் நீதிமன்றமே முடிவு செய்யட்டும் என தெரிவித்தது. இதையடுத்து, வழக்கைத் திரும்ப பெறுவது குறித்து அரசின் கருத்தைக் கேட்டு தெரிவிப்பதாக, தமிழக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. பின்னர், வழக்கை தமிழக அரசு திரும்பப் பெற்றது.

## 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காத ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல் 'சட்டவிரோதமானது' உச்ச நீதிமன்றம்

புதுடெல்லி, ஏப்.9

குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்திவைத்த தமிழக ஆளுநரின் செயல் சட்ட விரோதமானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தமிழக அரசு அனுப்பிய 10 மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்துவது தொடர்பாக தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் பார்திவாலா மற்றும் மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு தீர்ப்பளித்தது.

தீர்ப்பு விவரம்: சட்டப் பிரிவு 200ன் கீழ், மசோதாக்கள் ஒப்புதலுக்காக ஆளுநருக்கு அனுப்பப்படும்போது அவருக்கு மூன்று வாய்ப்புகள் உள்ளன. ஒன்று அவர், ஒப்புதல் வழங்குவது, இரண்டாவது ஒப்புதலை நிறுத்தி வைப்பது மூன்றாவது குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்புவது.

பிரிவு 200ன்படி, முதல் முறையாக மசோதா அனுப்பப்படும்போது அந்த மசோதாவை நிறுத்தி வைக்க விரும்பினால், மசோதாவில் உள்ள அம்சங்களை மறுபரிசீலனை செய்ய அல்லது திருத்தங்களை மேற்கொள்ள பரிந்துரைக்கலாம். அவ்வாறு பரிந்துரைத்து மீண்டும் சட்டப்பேரவைக்கு திருப்பி அனுப்ப வேண்டும். சபை மீண்டும் மசோதாவை நிறைவேற்றி ஆளுநரிடம் சமர்ப்பித்தால், ஆளுநர் அதன் பிறகு ஒப்புதலை நிறுத்திவைக்க முடியாது. அவர் ஒப்புதலை வழங்க வேண்டும்.



அரசியலமைப்பில் ஆளுநருக்கு வீட்டோ அதிகாரம் கிடையாது. மசோதாக்கள் மீது முடிவெடுப்பதில் தேவையற்ற தாமதம் கூடாது. இரண்டாவது முறையாக மசோதா அனுப்பப்படும்போது அதனை குடியரசுத் தலைவருக்கு பரிந்துறைக்கும் வாய்ப்பு ஆளுநருக்கு இல்லை. ஆளுநர் தனது ஒப்புதலை வழங்க வேண்டும் என்பது சட்டத்தில் தெளிவாக உள்ளது.

அந்த வகையில், குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக ஆளுநர் 10 மசோதாக்களை நிறுத்தி வைத்தது சட்டவிரோதமானது, சட்டப்படி தவறானது. எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகளும் சட்டவிரோதமானவை என்று நீதிமன்றம் கருதுகிறது.

ஆளுநரின் ஒப்புதலுக்கான காலக்கெடு இல்லாதபோதிலும், அவர் மசோதாக்களை காலவரையின்றி வைத்திருக்க முடியும் என்று அர்த்தமல்ல. அரசியலமைப்பில் நேரம் நிர்ணயிக்கப்படாத சந்தர்ப்பங்களில், முடிவு ஒரு நியாயமான காலத்திற்குள் எடுக்கப்பட வேண்டும் என்பதுதான் அர்த்தம்.

ஆளுநர் மசோதாக்களை நிறுத்தி வைக்க / ஒப்புதல் அளிக்க ஒன்று முதல் மூன்று மாதங்கள் வரை காலக்கெடுவை உச்ச நீதிமன்றம் நிர்ணயித்துள்ளது. பொது விதியாக, ஆளுநர் அமைச்சரவையின் ஆலோசனையைப் பின்பற்ற வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது.

ஆளுநர் மாநிலத்தின் முறையான தலைவர் என்றும் அவர் அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையின் கீழ் தனது அதிகாரங்களை பயன்படுத்துகிறார் என்றும் கடந்த கால அரசியலமைப்பு பெஞ்ச் முடிவுகளை உச்ச நீதிமன்றம் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

ஆளுநர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்த உச்ச நீதிமன்றத்தின் சில கருத்துகள்:

› ஆளுநர்கள் நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு ஏற்ப விடாமுயற்சியுடன் செயல்பட வேண்டும்

› அரசியல் நோக்கங்களால் வழிநடத்தப்படாமல், ஒரு நண்பராகவும், வழிகாட்டியாகவும், தத்துவஞானியாகவும் தனது செயல்பாடுகளைச் செய்ய வேண்டும்

› ஆளுநர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு முன்னோடி. அவர் ஒரு ஊக்கியாக இருக்க வேண்டும், தடுப்பவராக இருக்கக்கூடாது.

› ஆளுநர்கள் அரசியலமைப்பின் மதிப்புகளைப் பாதுகாக்க வேண்டும்

› ஆளுநர்கள் தங்களது அரசியலமைப்பு பதவிப் பிரமாணத்தின்படி நடந்து கொள்ள வேண்டும்

› ஆளுநர்கள் தங்கள் நடவடிக்கைகள் மக்களின் அரசியலமைப்பு நெறிமுறைகள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப உள்ளதா என்பதை தங்களுக்குத் தாங்களே ஆய்வு செய்ய வேண்டும்.

ஆளுநர்களுக்கு காலக்கெடு: ஆளுநர்கள் மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான காலக்கெடுவை உச்ச நீதிமன்றம் நிர்ணயித்துள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 200வது பிரிவின் கீழ், மசோதாக்கள் ஒப்புதலுக்காக ஆளுநர்களிடம் சமர்ப்பிக்கப்படும்போது, ஒப்புதலை நிறுத்தி வைத்தால், ஒரு மாதம். மாநில அமைச்சரவையின் ஆலோசனைக்கு மாறாக ஒப்புதலை நிறுத்தி வைத்தால், மூன்று மாதங்கள்.

மாநில அமைச்சரவையின் ஆலோசனைக்கு எதிராக குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு மசோதாக்கள் ஒதுக்கப்பட்டால், மூன்று மாதங்கள். ஆளுநர்களால் மறுபரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்படும் மசோதாக்கள் விஷயத்தில், ஒரு மாதம். இவை அதிகபட்ச காலக்கெடு. ஆளுநர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 'திமுக கூட்டணிக் கட்சிகள் உஷார்' சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்த இபிஎஸ் பேச்சு

சென்னை, ஏப்.9

ஒவ்வொரு கட்சியும் தனித்துவமாக செயல்பட வேண்டும் என்றும், திமுக கூட்டணி கட்சிகள் உஷாராக இருக்க வேண்டும் என்றும் எதிர்கட்சித் தலைவர் பழனிசாமி வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தபின் தலைமைச் செயலக வளாகத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: எதிர்க்கட்சி வைக்கும் கோரிக்கைகளை நிராகரித்து தொடர்ந்து எங்களை பேசுவதற்கு அனுமதிக்காமல், வேறு கட்சி தலைவர்கள் மட்டுமே பேச அனுமதிப்பது எந்த வகையில் நியாயம்? இதையொட்டியே சட்டப்பேரவைக்கு கருப்புச் சட்டை அணிந்து வந்தோம்.

சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகள் நேரலையில் ஒளிபரப்பு செய்யப்பட்டு வந்த நிலையில், 2023ம் ஆண்டுக்கு பிறகு, கவன ஈர்ப்பு தீர்மான கொண்டு வரப்பட்டு பேசப்படும் போதும், அது நேரலை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த மார்ச் 1ம் தேதி அதிமுக எம்எல்ஏ விஜயபாஸ்கர் காவிரி குண்டார் பிரச்சினை குறித்து நீர்வளத்துறை அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

ஆனால் அது நேரலையில் வரவில்லை. அதேபோல் அக்ரி கிருஷ்ணமூர்த்தி கடந்த மார்ச் 26ம் தேதி திருச்செந்தூர் ராமேஸ்வரம் திருக்கோயில் கூட்டத்தில் நெரிசலில் உயிரிழந்தவர்கள் குறித்து கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தார். அதுவும் நேரலை செய்யப்படவில்லை.

அதே திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சி எம்எல்ஏக்கள்



கவன ஈர்ப்பு தீர்மானத்தில் பேசும்போது அதை நேரலை செய்கின்றனர். ஆனால் எதிர்க்கட்சி (அதிமுக) எம்எல்ஏக்கள் கேள்வி கேட்கும் போது, கேள்விகளை நேரலை செய்யாமல் அமைச்சர் மற்றும் முதல்வரின் பதிலை மட்டுமே நேரலை செய்கின்றனர். கேள்வியே தெரியாமல் பதிலை மட்டும் நேரலை செய்தால் அது எப்படி மக்களுக்கு புரியும். இதை தான் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இவ்வாறு பேரவைத் தலைவர் எதற்காக ஒரு தலைபட்சமாக நடந்து கொள்கிறார்?

முதல்வருக்கு தில், திராணி, தெம்பு இருந்தால் சட்டப்பேரவையிலே எங்களை பேச வாய்ப்பளித்து, அதற்குரிய பதிலை அவையில் பதிவு செய்தால் அதை நாங்கள் வரவேற்போம். அதைவிடுத்து கோழைத்தனமாக எங்களை திட்டமிட்டு வெளியேற்றிவிட்டு, கடுமையான விமர்சனங்களை பதிவு செய்வது என்பது எந்த விதத்தில் நியாயம்? அதேபோல் எங்களது உரிமையை பறிக்கும் போது ஜனநாயக ரீதியாக கண்டித்து வெளிநடப்பு செய்கின்றோம். அதை கேலியும், கிண்டலும் செய்கின்றனர்.

இதே திமுக எதிர்கட்சியாக இருந்தபோது, வெளிநடப்பு செய்த காலங்களில் நாங்கள் கிண்டல் செய்தோமா? நாங்கள் மதித்தோம். அகங்காரத்துடன் இருக்கின்றனர். இந்த வரிசையில் இருந்து எதிர் வரிசைக்கு செல்வதற்கு நீண்ட காலமில்லை. இன்னும் 9 மாதகாலம் மட்டுமே இந்த ஆட்சி. அதன் பின் எதிர்க்கட்சியாக கூட திமுக வராது.

முதல்வர் ஸ்டாலின் எதிர்க்கட்சியாக இருந்தபோது பிரதமருக்கு எதிராக கருப்பு பலூன் விட்டார். அதே ஆளுங்கட்சியாக வந்த பிறகு அதே பிரதமருக்கு வெண்கொடை பிடித்தார். அந்தவகையில் முதல்வர் ஸ்டாலின் வெண்குடை (வெள்ளைக் குடை) வேந்தராவார். இவர் வீரத்தை பற்றி பேசலாமா? எங்களை பொறுத்தவரை வேண்டும் என்றால் வேண்டும். வேண்டாம் என்றால் வேண்டாம்.

திமுகவை போல கூட்டணி கட்சிகளை அடிமையாக வைத்திருக்கும் கட்சி அதிமுக அல்ல. ஒவ்வொரு கட்சியும் தனித்துவமாக செயல்பட வேண்டும்.

அப்போது தான் அந்தந்த கட்சிகள் வளரும். ஆனால் திமுக கூட்டணியில் இருக்கும் கட்சிகள் எந்த காலத்திலும் வளராது. எல்லோரும் அடிமை சாசனம் எழுதி கொடுத்து விட்டனர். காலப்போக்கில் இந்த கூட்டணி கட்சிகள் காற்றோடு காற்றாக கரைந்து போகும். எனவே திமுக கூட்டணி கட்சிகள் உஷாராக இருங்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

## "ஆளுநர் பொறுப்பில் நீடிக்கும் தார்மிக தகுதியை இழுடநா ஆர்.என்.ரவி ராஜ்பவனை விட்டு வெளியேற வேண்டும்" வைகோ

சென்னை, ஏப்.9

"ஆளுநர் பதவியில் நீடிக்கும் தார்மிக தகுதியை ஆர்.என்.ரவி இழந்துவிட்டார். உடனடியாக அவர் ராஜ்பவனை விட்டு வெளியேற வேண்டும்" என மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் 2023 அக்டோபர் மாதம் தாக்கல் செய்யப் பட்ட மனுவில், "தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பிய மசோதாக்கள் மற்றும் அரசு உத்தரவுகளை நிறைவேற்ற ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் வைத்துள்ளார். தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றிய மசோதாக்களுக்கு ஒப்புதல் தராததின் மூலம் சட்டமன்றம் தனது கடமைகளைச் செய்ய ஆளுநர் தடுக்கிறார்.

சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர்கள் பரிசீலிப்பதற்கான



கால வரம்பை நிர்ணயிக்கும் வழிகாட்டுதல்களை வகுக்க வேண்டும். ஆளுநர்களுக்கு என்று குறிப்பிட்ட காலக்கெடு விதிக்க வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கின் இறுதி விசாரணை முடிந்து இன்று உச்ச நீதிமன்றத்தின் நீதியரசர்கள் பர்திவாலா, மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு மிக முக்கியமான தீர்ப்பை அளித்துள்ளது.

குடியரசுத் தலைவருக்கு 10 மசோதாக்களை அனுப்பிவைத்த ஆளுநரின் நடவடிக்கையை ரத்து செய்துள்ள உச்ச நீதிமன்றம், இரண்டாவது முறையாக நிறைவேற்றி அனுப்பிய 10 மசோதாக்களுக்கு அன்றே ஒப்புதல் அளித்திருக்க வேண்டும், குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பிவைத்தது சட்டவிரோதம் என்றும், ஜனாதிபதிக்கு 10 மசோதாக்களை ஆளுநர் அனுப்பி வைத்தது செல்லாது என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு ஆளுநரின் செயல்பாடுகள் அரசியலமைப்பு சட்டப்படி வரையறுக்கப்பட்ட நோக்கத்துக்கு எதிராக உள்ளது என்றும், மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய ஆளுநர் ஆர்.என். ரவியின் செயல்பாடு நேர்மையானதாக இல்லை, ஆளுநருக்கு என தனிப்பட்ட அதிகாரங்கள் இல்லை, ஆளுநர் மசோதாக்களை நிறுத்தி வைத்தது சட்டவிரோதம் என்றும் உச்சநீதிமன்றம் கடும் கண்டனத்தை பதிவு செய்துள்ளது.

இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக செயல்படுவதையும், ஆளுநர் பொறுப்பை அரசியல் நோக்கங்களுக்கு பயன்படுத்தி வருவதையும் உச்ச நீதிமன்றம் தெளிவாக உணர்ந்து கொண்டு ஆளுநர் ஆர் என் ரவிக்கு உச்ச நீதிமன்றம் கடும் உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. ஆளுநர் பதவியில் நீடிக்கும் தார்மிக தகுதியை ஆர்.என்.ரவி இழந்துவிட்டார். உடனடியாக அவர் ராஜ்பவனை விட்டு வெளியேற வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

## பல்கலைக்கழக வேந்தர் பொறுப்பில் இருந்து ஆளுநர் விடுவிப்பு: வழக்கறிஞர் வில்சன் தகவல்

சென்னை, ஏப்.9

உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து, தமிழ்நாட்டில் உள்ள மாநில பல்கலைக்கழகங்களின் வேந்தர் பொறுப்பில் இருந்து ஆளுநர் இன்று முதல் விடுவிக்கப்படுவதாக திமுக மாநிலங்களவை எம்பியும் உச்ச நீதிமன்ற வழக்கறிஞருமான வில்சன் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் காலம் தாழ்த்துவதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் இன்று (ஏப். 4) அளித்துள்ள தீர்ப்பு வரலாற்றுச் சிறப்புமிக்கது.

துணை வேந்தர் நியமனம், கைதிகளுக்கான தண்டனை குறைப்பு, டிஎன்பிஎஸ்சி பணி நியமனம் உள்பட எந்த மசோதாவை அனுப்பினாலும் அவற்றுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்காமல் இருந்தார். இதை எதிர்த்துதான் வழக்கு தொடரப்பட்டது. இப்படி ஒரு வழக்கை தொடர எங்கள் தலைவர் ஸ்டாலின் ஆலோசனை வழங்கினார்.

அவர் வழங்கிய ஆலோசனையின் படி தொடரப்பட்ட இந்த வழக்கில் இன்று வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாது, நாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தக்கூடியதாக உள்ளது. இதன்மூலம், அனைத்து மாநிலங்களின் சுயாட்சியை முதல்வர் ஸ்டாலின் நிலைநாட்டி இருக்கிறார்.

நாங்கள் 2023ல் வழக்கு தாக்கல் செய்தோம். அதற்கு முன்பே 2 ஆண்டுகாலமாக 10 மசோதாக்கள் நிலுவையில் இருந்ததால், உச்ச நீதிமன்றமே 10 மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளித்துள்ளது. எனவே, அந்த மசோதாக்கள் இன்று முதல் நடைமுறைக்கு வரும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. இனி இதற்கு ஆளுநர் ஒப்புதல் தேவையில்லை.

மேலும், இனி எந்த ஒரு ஆளுநரும் அமைச்சரவையின் ஆலோசனையின்படிதான் நடந்து கொள்ள வேண்டும் என்றும், அதை மீறி நடந்துகொள்ளக்கூடாது என்றும் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வேந்தர் பொறுப்பில் இருந்து ஆளுநரை விடுவிக்க வேண்டும் என்ற மசோதாவுக்கும் உச்ச நீதிமன்றம் ஒப்புதல் வழங்கி உள்ளது. எனவே, இன்று முதல் வேந்தர் பொறுப்பில் இருந்து ஆளுநர் விடுவிக்கப்படுகிறார். இனி தமிழ்நாடு அரசு யாரை முன்மொழிகிறதோ அவர்தான் வேந்தராக இருப்பார்" என தெரிவித்தார்.

# குற்ற செயல்களில் ஈடுபடுவோருக்கு சிம்மசொப்பனமாக இருக்கும் பார்த்திபனூர் காவல் ஆய்வாளர்

ராமநாதபுரம், ஏப்.9

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி வட்டம் பார்த்திபனூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் மணல் கொள்ளை கஞ்சா மற்றும் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கும் பார்த்திபனூர் காவல் ஆய்வாளர் கணேசன் மற்றும் அவருக்கு உறுதுணையாக இருக்கும் சார்பு ஆய்வாளர் சரவணன் ஆகியோரை அப்பகுதி மக்கள் வெகுவாக பாராட்டி வருகின்றனர்




இவர்கள் இருவரும் பார்த்திபனூர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றியதற்கு சமூக ஆர்வலர்கள் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றனர்.

# தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் மேம்படுத்தப்பட்ட ஊதியம் வழங்க கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம்




மதுரை: ஏப்.9

மதுரை ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் சார்பாக, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் நியாயமான கோரிக்கை மீது தமிழக அரசு விரைந்து அரசாணைகளை வெளியிடக் கோரியும், மேம்படுத்தப்பட்ட ஊதியம் வழங்கிட கோரியும், சங்கத்தின் மாவட்ட தலைவர் கோபி தலைமையிலும், மாவட்ட துணைத் தலைவர்கள் முருகானந்தம், சுரேஷ்பிரெடரிக் கிளமெண்ட், இங்கர்சால், செந்தில்குமார், மத்திய செயற்குழு உறுப்பினர்கள், ரபி ரஞ்சித்குமார், செந்தில்வள்ளி, ராம்குமார், மாவட்ட இணைச் செயலாளர்கள், மணிமேகலை, இலக்கியா, செந்தில்குமரன், பழனியப்பன் ஆகியோர் முன்னிலையில் கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது, ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச்செயலாளர் முகைதீன் அப்துல் காதர் கோரிக்கை விளக்க உரையாற்றினார், ஜிழிநிணிகி மாவட்ட தலைவர் தமிழ், ஜிழிநிணிகி மாவட்ட செயலாளர் சந்திரபோஸ் ஆகியோர் வாழ்த்துரை ஆற்றினார்கள்.

ஜிழிநிணிகி மாநிலச் செயலாளர் நீதி ராஜா சிறப்புரையாற்றினார், மாநில தலைவர் முருகையன் நிறைவுறையாற்றினார், மாவட்ட பொருளாளர் முத்துப்பாண்டியன் நன்றியுரை ஆற்றினார், ஆர்ப்பாட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அலுவலர்களின் பணித்தன்மையினை கருத்தில் கொண்டு அனைவருக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும், (கிரீகூீவீ ஷிமீணீநீளீ) பணியில் நேரடியாக உள்வட்ட வருவாய் ஆய்வாளர்களை ஈடுபடுத்துவதனை ரத்து செய்து தொடர்புடைய அலுவலர்கள் மூலம் இப்பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும், மூன்றாண்டுகளுக்கு மேம்பட்ட அலுவலக உதவியாளர் காலி பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை பிரிவில் 31.3.23 முதல் களைக்கப்பட்ட 97 பணியிடங்களை உடனடியாக வழங்கிட வேண்டும், அரசின் சிறப்பு திட்டங்கள் மற்றும் பல்வேறு நலத்திட்ட முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணும் நேர்வில் அனைத்து வட்டங்களுக்கும் சிறப்பு துணை வட்டாட்சியர் பணியிடம் ஏற்படுத்திட வேண்டும், போன்ற பத்துக்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# எஸ்.கரிசல்குளத்தில் கேட்ட வரம் தரும் முத்துமாரியம்மன் கோவில் பங்குனி திருவிழா







மானாமதுரைஏப்.9

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே அன்னவாசல் புதூர் ரோட்டில் உள்ள எஸ்.கரிசல்குளம் அருள்மிகு முத்து மாரியம்மன் கோவில் 47ம் ஆண்டு பங்குனி பொங்கல் விழா கடந்த 29 ந்தேதி காப்பு கட்டுடன் பூஜை வழிபாடு செய்து தொடங்கியது.

விழா நாட்களின்போது தினந்தோறும் அம்மனுக்கு அபிஷேக, ஆராதனைகள், பூஜைகள் நடைபெற்றது.

முக்கிய விழாவான பொங்கல் விழாவில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது இக்கோவிலில் பொங்கல் வைத்து ஏராளமான பக்தர்கள் தீச்சட்டி எடுத்து ஆடி கோவிலில் வலம் வந்து முத்துமாரியம்மனை தரிசனம் செய்தனர்.எஸ். கரிசல்குளம் மற்றும் சுற்றுவட்டார கிராம பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் பால்குடம், பூக்கரகம், கரும்பாலை தொட்டில் ஆயிரங்கண் பானை மற்றும் அலகுகள் குத்தியும், பூக்குழி இறங்கியும் நேர்த்தி கடன் செலுத்தி வழிபாடு செய்தனர் . அதை தொடர்ந்து சிறப்பு அன்னதானம் இரவு முழுவதும் நடைபெற்றது.


நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை திருக்கோவில் டிரஸ்டி ராக்கு லட்சு மணன்,செர்டு பாண்டி ஆகியோர் தலைமையில் செய்து இருந்தனர்.

# சிவகங்கை மாவட்ட அஇஅதிமுக எம்ஜிஆர் இளைஞர் அணி இணை செயலாளர் நியமனம்

சிவகங்கை ஏப்.9

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியை சேர்ந்த முனைவர். ஐயப்பன் ணிகூீ. வி. அர்ச்சுணன் சிவகங்கை மாவட்ட அஇஅதிமுக எம்ஜிஆர் இளைஞரணி இணை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து அஇதிமுக நிர்வாகிகள் , இளைஞர்கள் என பலரும் தொலைபேசி வாயிலாகவும் இணையதள வாயிலாகவும் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்







புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அர்ஜுனன் கடந்து வந்த பாதை 14 வயதில் 1993 ம் ஆண்டு அன்று முதல் உறுப்பினர் ஆனார்.

1997 கிளை கழக பொருளாளர் பதவி கிட்டியது. தொடர்ந்து கழக பணியில் சட்டமன்றம், நாடாளுமன்றம், உள்ளாட்சி தேர்தலில் பூத்து கமிட்டி பொறுப்பாளர்,பூத்து கமிட்டி தலைவர், பூத்து கமிட்டி ஏஜென்டாக செயல்பட்டார்

நகர் கழக அம்மா பேரவை வாக்கு சேகரிப்பாளர் தீவிரமாக செயல்பட்டார்

அஇஅதிமு கழகம் அசாதாரண சூழலில் காரைக்குடி 1 வது வட்ட கழக செயலாளராக பயணித்தது வந்தார். பல்வேறு நிலைகளில் நகர இலக்கிய அணி, மாணவரணி போன்ற கழக பணிகளில் பணியாற்றினார்.

தற்போது மாவட்ட மாணவரணி து. செயலாளராக பதவி உயர்வு பெற்றார். தமிழகத்தின் முதன்முதலாக கழகத்தின் அசாதாரண சூழலில் கழக நிரந்தர பொதுச்செயலாளர் என்றும் 2026 சட்டமன்ற தேர்தலின் அதிகார பூர்வ தமிழக நிரந்தர முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி என்றும் சிவகங்கை மாவட்ட முழுவதும் பிளக்ஸ் மற்றும் சுவரொட்டி போஸ்டர்கள் ஒட்டி ஒட்டுமொத்த தமிழக முழுவதும் அதிர்வலையை ஏற்படுத்தினர்.

தனது இரண்டாம் தலைமுறையாக 32 ஆண்டு கால அரசியல் பணியில். கடும் போராடங்களுக்கும், விமர்சனங்களுக்கும் மத்தியில் பயனித்து இன்று சிவகங்கை மாவட்ட கழக இளைஞரணி இணைச்செயலாளர் பதவி கிடைத்துள்ளது. பதவி உயர்வு பெற அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் சிவகங்கை மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சரும் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் செந்தில்நாதன் தனது நெஞ் சார்ந்த நன்றியை தெரி வித்துள்ளார்.

மேலும் அஇஅதிமுக வளர்ச் சிக்காக இன்னும் பல்வேறு நிலைகளை சந்திக்க தயாராக உள்ளதாக பத்திரிக்கை யாளர்களிடம் தெரிவித்தார்.

# புகார் கொடுத்தும் கண்டுகொள்ளாத மானாமதுரை நகராட்சி நிர்வாகம்



மானாமதுரை ஏப்.9

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி 22வது வார்டு ஆதனூர் சாலை செல்லும் பகுதியில் இருக்கிறது நுட வைத்திய சாலைப் பகுதியில் உள்ள சில தெருக்கள் உள்ளன இந்தப் பகுதிகள் சுமார் 100ற்க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர் இந்தப் பகுதியில் நகராட்சி நிர்வாகம் சார்பில் இரு சோலார் மின்விளக்குகள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வந்த நிலையில் திடீரென சோலார் மின் கம்ப விளக்குகள் அடியோடு சாய்ந்து தெருவில் கிடந்து வருகிறது இதனை அந்தப் பகுதி மக்கள் நகராட்சி நிர்வாகத்திடம் புகார் கூறியதாக கூறப்படுகிறது இந்த நிலையில் சோலார் மின்விளக்கு கீழே விழுந்த போதிலும் இரவு நேரத்தில் கீழே விழுந்த படியே சோலார் லைட் எரிந்து வருகிறது உடனடியாக அதனை சரி செய்து கொடுக்க படி அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்..

# மானாமதுரை சுந்தர விநாயகர் கோவிலில் அயோத்தி பாலராமருக்கு ராமநவமி பூஜை வழிபாடு விழா

மானாமதுரை ஏப்9

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி சுந்தர விநாயகர் கோவிலில் பலவருடங்களாக பூஜை செய்து பக்தர்கள் வழிபடும் தெய்வமாகும் இங்கு ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகம் படம் மற்றும் ராமஜென்மபூமி அயோத்தியில் இருந்து கொண்டு வரப்பட்ட அழகிய வடிவமைப்பு கொண்ட பாலராமர் சுவாமி சிலைக்கு ராமநவமி பூஜை வழிபாடு நடைபெற்றது. இதில் சுந்தர விநாயகர்க்கு பெருமாள் திரு நாமம் யிட்டு சிறப்பு தீபாராதனை அதை தொடர்ந்து பக்தர்கள் சுந்தர காண்டம் வாசித்தும் ஹரே ராமா பாராயணம் பாடியும் வழிபாடு செய்தனர். பக்த்தர்களுக்கு ஹனுமான் உபாசகர் ராஜேந்திர பிரசாத் செந்தூரம் மற்றும் பானகம், மற்றும் நாணயத்துடன் நெல் மணி பிரசாதம் வழங்கினார் ஏராளமான பக்தர்கள் சுந்தர





விநாயகர் கோவிலில் உள்ள அயோத்தி பாலராமரை தரிசனம் செய்தனர். முன்னதாக ஏராளமான பக்தர்கள் ராம நாம பஜனை பாடல்கள் பாடினார்கள்.

# பாம்பன் பாலம் திறப்பு ராமேஸ்வரம்மதுரை இரவு நேர ரயில்கள் இயக்க கோரிக்கை ! எதிர்பார்ப்பில் இரயில் பயணிகள்

இராமநாதபுரம் ஏப்9

இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் பாலத்தை நேற்று முன்தினம் பாரத பிரதமர் மோடி திறந்து வைத்தார். இதனால் அனைத்துரயில்களும் தற்போது ராமேஸ்வரம் வரை சென்று வருகிறது இதனால் பயணிகள் மத்தியில் வரவேற்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது இதனிடையே ஏற்கனவே இயக்கப்பட்ட மதுரைராமேஸ்வரம் மற்றும் ராமேஸ்வரம்மதுரை ஆகிய இரு பேசஞ்சர் ரயில்கள் மீண்டும் இயக்க பயணிகள் மத்தியில் கோரிக்கை எழுந்துள்ளது இதனால் பல்வேறு தரப்பு ரயில் பயணிகளும் பயன் அடைவார் என்றும் கூறப்படுகிறது மதுரையில் இருந்து இரவு 11:30 மணிக்கு இதேபோல் ராமேஸ்வரத்தில் இருந்து இரவு 11:30 க்கும் இரு ரயில்கள் இயக்கப்பட்டது குறிப்பாக தென் மாவட்டங்களில் இருந்து




திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய ரயில்கள் மதுரை வழியாக சென்னை செல்கிறது இந்த ரயில்களில் வரும் பயணிகள் மற்றும் வட மாநில பயணிகள் மதுரையில் இறங்கி பேருந்து மூலமாக ராமேஸ்வரம் சென்று வருகின்றனர்

இதனால் பயணிகள் மிகவும் சிரமம் படுகின்றனர் குறிப்பாக மதுரை ரயில் நிலையத்தில் இறங்கி அங்கிருந்து மாட்டுத்தாவணி சென்று அதன் பின் பேருந்தில் ராமேஸ்வரம் செல்வது என்றால் 5 மணி நேரம் முதல் 6 மணி நேரம் வரை ஆகிவிடும் ஆனால் ஏற்கனவே இயக்கப்பட்ட இந்த ரயில்களால் தென் மாவட்டத்தில் இருந்து வரும் பயணிகள் மதுரையில் இறங்கி 11:30 மணிக்கு கிளம்பும் பேசஞ்சர் ரயில்களில் இவர்கள் எப்போதும் பயணம் செய்வார்கள் அந்த ரயில் 3 மணி அல்லது 4:00 மணிக்கு இராமேஸ்வரம் சென்றடையும் இதனால் ராமேஸ்வரத்திற்கு பயணிகள் எந்தவித சிரமம் இல்லாமல் சென்று வந்தனர் இதே போல் இரவு 11:30 மணிக்கு ராமேஸ்வரத் திலிருந்து ராமநாதபுரம் பரமக்குடி மானாமதுரை மதுரை வரை இயக்கப்பட்ட பேசஞ்சர் ரயிலையும் இயக்கவும் கோரிக்கை இழந்துள்ளது இந்த ரயில் இயக்கம் பட்சத்தில் அதிகாலை சென்னை செல்வதற்கு இதில் பயணம் செய்யும் பயணிகள் பயனடைவார்கள் என்றும் கோரிக்கை எழுந்துள்ளது உடனடியாக மதுரை தெற்கு ரயில்வே இதனை உடனடியாக பரிசீலனை செய்ய வேண்டும் என பல்வேறு தரப்பிலிருந்தும் கோரிக்கை எழுந்துள்ளது ஏற்கனவே இயக்கப்பட்ட ரயிலைதான் இயக்க வேண்டும் எனவும் கோரிக்கை எழுந்துள்ளது.



பீகார் மாநிலத்தில் தேசிய அளவிலான சப் ஜூனியர் ஆண்கள் கபடி போட்டி கடந்த மார்ச் 27ம் தேதி முதல் 30ம் தேதி வரை நடைப்பெற்றது. இதில் 28 மாநிலத்தை சேர்ந்த அணிகள் கலந்து கொண்டது. தமிழகத்தை சேர்ந்த ஆண்கள் அணியும் பங்கேற்றன. இதில் தமிழகத்தை சேர்ந்த அண்ணா செலக்ட் கிளப் சார்ந்த அகரம் எம்.வினோத் அவர்களின் மகன் வி.வருண்ராஜ் செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் சார்பாக மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி வாழ்த்துக்கள் தெரிவித்தனர் இதில் அமைச்சூர் கபடி கழகம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழ்நாடு அமெச்சூர் கபடி கழக தலைவர் எம்.சோலைராஜா, பொதுச் செயலாளர் ஏ.சபியுல்லா, செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழக தலைவர் பி.சிவமணி, செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழக செயலாளர் மு.வேல்முருகன் ஆகியோர் ஆலோசனைப்படி கபடி கழக துணைச் செயலாளர் ஏ.ஜான்சன் தமிழ்நாடு அணிக்காக கலந்து கொண்டு விளையாடிக் கொண்டிருக்கும் வி.வருண்ராஜ்க்கு மாலை மற்றும் சால்வை அணிவித்து வாழ்த்துகளை தெரிவித்தனர்.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா தலைமையில், மீன்வளர்ச்சி துறை மற்றும் மீனவர் நலன் ஆணையர் ஆர்.கஜலெட்சுமி இரையுமன்துறை மீன்பிடித்துறைமுக பகுதியில் தடுப்பு சுவர் அகலப்படுத்தும் பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

# சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் 77 ஆம் கல்லூரி ஆண்டு விழா





காரைக்குடி, ஏப்.9

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் 77 ஆம் கல்லூரி ஆண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரியில் நடைபெற்று வரும், ஐம்பெரும் விழாவின் நிறைவு நாள் நிகழ்வாக கல்லூரி ஆண்டு விழா இன்று நடைபெற்றது. அழகப்பா அரசு கலைக்கல்லூரித் தமிழ்த்துறை இணைப் பேராசிரியரும் தமிழ்த்துறைத் தலைவருமான முனைவர் சிதம்பரம் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமி தலைமையேற்று வள்ளல் அழகப்பரின் சிறப்பு, கல்லூரியின் வரலாற்றுப் பெருமை ஆகியவற்றை எடுத்துரைத்ததுடன் கல்லூரியின் நிகழ்வுகள் பற்றிய ஆண்டறிக்கை யினையும் வாசித்தளித்தார். கோயம்புத்தூர் அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் உயர் கல்வி நிறுவனத்தின் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் குருஞானாம்பிகா சிறப்பு விருந்தினராகப் பங்குபெற்று அழகப்பர் தற்கால மாணவ சமூகத்திற்கு மிகச்சிறந்த வழிகாட்டியாய் விளங்குகின்றார் என்று உரைத்ததுடன் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய வாழ்வியல் விழுமியங்களையும் எடுத்துரைத்து இரண்டாவது பெற்றோர்களாக விளங்கும் ஆசிரியர்களை மாணவர்கள் மதிக்க கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சிறப்புரையாற்றினார்.

கல்லூரி முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமியின் பெற்றோர் வயி.அ. அண்ணாமலைச் செட்டியார் அன்னபூரணி ஆச்சி நினைவு அறக்கட்டளை சார்பாக கணினியியல், இயற்பியல் துறைகளில் பல்கலைக்கழக அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. ஏ.எல். மெய்யப்பன் மெ.சரோஜா நினைவு அறக்கட்டளையின் சார்பில் வேதியியல் துறையில் பல்கலைக்கழக அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்குப் பரிசுத்தொகை வழங்கப்பட்டது. கல்லூரியின் பல்வேறு துறைகளில் பல்கலைக்கழகத் தேர்வில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற 203 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. கல்லூரியின் நுழைவு வாயில் தொடங்கி இரண்டாம் நுழைவு வாயில் வரை ரூபாய் 24,56,000 (ரூபாய் இருபத்தி நான்கு இலட்சத்து ஐம்பத்தி ஆறாயிரம்) செலவில் சாலை அமைத்துக் கொடுத்த சிவகங்கை மாவட்டக் கவுன்சிலர் இராதா பாலசுப்பிரமணியன்க்கு விழாவில் மரியாதை செய்யப்பட்டது. விழாவின் நிறைவில் வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் நிலோபர்பேகம் அவர்கள் நன்றியுரை கூற விழா நிறைவு பெற்றது. கல்லூரியின் 77ஆம் ஆண்டு விழாவில் துறைத் தலைவர்களும் பேராசிரியர்களும், ஆசிரியரல்லாப் பணியாளர்களும் மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர்.

கல்லூரி ஆண்டு விழாவினைத் தமிழ்த்துறைத் தலைவரும் பேராசிரியர்களும் பொறுப்பேற்று நடத்தினர்.

# தாம்பரத்தில் செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் காஞ்சி மாவட்டம் ஒருங்கிணைந்த மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்




செங்கல்பட்டு, ஏப்.9

தாம்பரத்தில் செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் காஞ்சி மாவட்டம் ஒருங்கிணைந்த மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் எஸ்.கே. ஜாகிர் உசேன் தலைமையில் நடைபெற்றது காஞ்சி மாவட்ட தலைவர் ஜே.சலீம் கான் முன்னிலை வகித்தார்கள் சிறப்பு அழைப்பாளராக மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொது செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தாம்பரம் எம்.யாக்கூப் அவர்கள் கலந்து கொண்டு கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம்: 1 வஃக்பு திருத்த சட்டத்திற்கு எதிராக எதிர்வரும் 15.4.2025 அன்று காலை 10 மணி அளவில் தாம்பரம் சண்முகம் சாலையிலிருந்து பேரணியாக சென்று தாம்பரம் ரயில் நிலையம் முற்றுகை போராட்டம் நடத்துவது என்று தீர்மானம் செய்யப்பட்டது. தீர்மானம்: 2 15.4.2025 அன்று மாலை 4மணி அளவில் காஞ்சி மாவட்டம் சார்பாக குன்றத்தூரில் பேரணியாக சென்று தபால் நிலையம் முற்றுகை போராட்டம் நடத்துவது என தீர்மானம் செய்யப்பட்டது.

தீர்மானம்:3 18.4.2025 அன்று தாம்பரம் பாரதி திடலில் இருந்து பேரணியாக சென்று பாஸ்போர்ட் ஆபீஸ் முற்றுகை நடத்துவது என்று தீர்மானம் செய்யப்பட்டது

ஆலோசனை கூட்டத்தில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட நிர்வாகிகள், காஞ்சி மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


# இளையான்குடியில் உலக சுகாதார தினத்தை முன்னிட்டு சட்ட விழிப்புணர்வு மற்றும் மருத்துவ முகாம்




இளையான்குடி ஏப்.9

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் உலக சுகாதார தினத்தை முன்னிட்டு சட்ட விழிப்புணர்வு மற்றும் மருத்துவ முகாம் சட்டப்பணிகள் குழுவின் தலைவரும் நீதிபதியுமான ஹரி ராமகிருஷ்ணன் தலைமையில் இளையான்குடி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

முகாமில் சிவகங்கை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சித்த மருத்துவப் பிரிவு துணை மருத்துவர் அலுவலர் டாக்டர் காந்திநாதன் காளையார் கோயில் அரசு மருத்துவமனை சித்த மருத்துவப் பிரிவு துணை மருத்துவ அலுவலர் டாக்டர் பவானி சாலிகிராமம் அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர் டாக்டர் சலாஹீதின் ஆகியோர் கலந்து கொண்டனர். வழக்கறிஞர்கள் நீதிமன்ற பணியாளர்கள் மற்றும் வழக்காடிகளுக்கு பரிசோதனை செய்யப்பட்டு மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது. செவிலியர்கள் கார்த்திகா பவித்ரா ஜெயபாரதி மறவமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் பல்நோக்கு பணியாளர் இந்திரா இளையான்குடி அரசு மருத்துவமனை பணியாளர் முத்தையா மக்களை தேடி மருத்துவ பணிகையாளர்கள் சரஸ்வதி பிரேமா ஆகியோர் கலந்துகொண்டு மருத்துவ பரிசோதனைகளை செய்தனர். முகாமில் வழக்கறிஞர்கள் கே.அண்ணாதுரை, முத்துசாமி, எஸ் அண்ணாதுரை, சத்தியேந்திரன் ஜான் சேவியர் ரவி ஓம் முருகன் பாண்டியன் வேல்முருகன் கே.ரவி மாரிமுத்து மற்றும் அரசு வழக்கறிஞர்கள் பார்த்தசாரதி அனைத்து நீதிமன்ற பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர். சட்டப்பணிகள் குழு நிர்வாக உதவியாளர் ஆர்த்தி நன்றி கூறினார். நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை வட்ட சட்டப் பணிகளுக்கு குழுவினர் செய்திருந்தனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் பேரூராட்சிக்கு உட்பட்ட சிவகங்கை செல்லும் சாலையில் கோழி கழிவுகளை சாலை ஓரங்களில் கொட்டப்படுவது வழக்கமாக உள்ளது . நாய்கள் கழிவுகளை சாப்பிட்டு வெறியாக வாய்ப்புள்ளது. பேரூராட்சி சார்பில் குப்பைகள் சேகரிக்கப்படுகிறதா இல்லையா என்ற கேள்வி எழுந்துள்ளது ?.இதனால் பொதுமக்கள் அச்சத்துடனே அவ்வழியே கடந்து செல்கின்றனர் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா?

# தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் வெற்றி பெற்றதை முன்னிட்டு பல்லாவரத்தில் பட்டாசு வெடித்து கொண்டாட்டம்



பல்லாவரம் ஏப்.9

தமிழ்நாடு ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் இதுவரை நடக்காத வரலாற்று சிறப்புமிக்க சம்பவம் நடந்துள்ளது. ஆளுநர்கள் மசோதாக்கள் மீது முடிவெடுக்க பெரும்பாலும் நீதிமன்றங்கள் காலக்கெடு எதையும் விதிக்காமல் இருந்த வந்த நிலையில் தமிழ்நாடு தொடர்ந்த வழக்கில் அது முதல் முதலாக நடந்துள்ளது மசோதா மீது ஆளுநர் முடிவெடுக்க வேண்டிய கால வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது முதலமைச்சர் மாநில சுயாட்சியில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை அளித்ததை யொட்டி பல்லாவரம் சட்ட மன்றத் தொகுதி குரோம் பேட்டை பேருந்து நிலையம் அருகாமையில் பல்லாவரம் வடக்கு பகுதி கழக செயலாளர் மண்டல தலைவருமான இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினார் கள். உடன் பல்லாவரம் தெற்கு பகுதி செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜானகிராமன் வட்ட செயலாளர்கள் பகுதி கழக நிர்வாகிகள் இருந்தனர்..

# மதுரை சமூக அறிவியல் கல்லூரியில் திறன் வளர் பயிற்சி




மதுரை ஏப்:9

மதுரை சமூக அறிவியல் கல்லூரி மற்றும் தேசிய சமூக பாதுகாப்பு நிறுவனம் இணைந்து ஏற்பாடு செய் துள்ள திருநங்கையர் நலனுக்கான தொண்டு நிறுவனங் களில் பணிபுரியும் களப்பணி யாளர்கள் மற்றும் ஆதரவாளர் களுக்கான ஐந்து நாட்கள் ஆற்றுப்படுத்துதல் திறன் வளர்ப்பு பயிற்சி முகாமின் தொடக்கவிழா சிறப்புடன் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக மதுரை மாவட்ட குடும்பநல நீதிமன்ற நீதிபதி வி. அனுராதா அவர்கள் கலந்து கொண்டு இந்த நிகழ்வினை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். அவரது உரையில் குழந்தை வளர்ப்பு பற்றியும், திருநங்கை யர்களின் நலனில் குடும்ப ஆதரவின் முக்கியத்துவம் பற்றியும் அன்புதான் இவ்வுல கத்தை இயக்குகிறது என் றும், அவ்வன்பை திருநங்கை யர்களுக்கு கிடைக்கப் பெற செய்யவேண்டும் உரை யாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரிச் செயலர் டி.வி. தர்மசிங் அவர்கள் தலைமை யுரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் பி. ஜெயக்குமார் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

தொடர்ந்து திருநங்கையர் ஆய்வு மற்றும் ஆவண மையம் நிர்வாக இயக்குநர் பிரியாபாபு, சமூகமேம்பாட்டு அதிகாரி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் பூமிகா மதிவாணன், மூத்த வழக்கறிஞர் மதுரை மாவட்ட சட்ட உதவிமையம் எஸ்.முத்துக் குமார், நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை நிர்வாக இயக்குநர் குருசாமி, ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். இந்த பயிற்சி ஒருங்கிணைப்பாளார் முனைவர் மு.நிஷாந்த் அவர்கள் பயிற்சியின் நோக்கங்கள் பற்றி விரிவாக எடுத்து கூறினார்.

இந்நிகழ்ச்சியின் இறுதியாக நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் இக்கல்லூரியின் உதவிபேராசிரியர் குருமூர்த்திநன்றி கூறினார்.



மருத்துவத் துறையில், நோய் கண்டறிதல் பிரிவில் முன்னணியில் இருக்கும் நியூபெர்க் டயக்னாஸ்டிக்ஸ், மதுரையில் அதன் புதிய நவீன ரீஜினல் ரெஃபரன்ஸ் ஆய்வகம் மற்றும் ஆரோக்கிய மையத்தைத் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த மேம்பட்ட வசதியை, நரம்பியல் நிபுணர், டாக்டர் எஸ். மீனாட்சி சுந்தரம், நியூபெர்க் டயக்னாஸ்டிக்ஸ்ன் நிறுவனர் மற்றும் தலைவர், டாக்டர் ஜிஎஸ்கே வேலு, போஸ் லேப்ஸ் நிறுவனர் டாக்டர் புரட்சிமணி.எஸ் ஆகியோர் திறந்துவைத்தனர். நியூபெர்க் போஸ்ன் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் அறிவரசன் எஸ்.பி உடனிருந்தார்.

# வக்ஃபு திருத்தச் சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தி சிவகங்கையில் விசிக ஆர்ப்பாட்டம்



சிவகங்கை, ஏப்.9

வக்ஃபு திருத்தச் சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தி சிவகங்கை நகராட்சி அரண்மனை வாசல் முன்பாக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இஸ்லாமிய சமூகத்தின் உரிமையைப் பறிக்கும் வகையிலும் , இஸ்லாமிய சமூகத்தின் ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையிலும் கொண்டுவரப்பட்ட ஒன்றிய அரசின் வக்ஃபு திருத்தச் சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தியும் பாஜக அரசின் பெரும்பான்மைவாத பாசிச போக்கை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்பாட்டத்தில் தெற்கு மாவட்ட செயலாளர் வே.பாலையா வடக்கு மாவட்டசெயலாளர் சி.சு.இளையகௌதமன் தலைமை வகித்தனர். மண்டல துணைசெயலாளர் அ.முத்துராசு முன்னிலை வகித்ததர். மாநில துணைச்செயலாளர் பெரியசாமி கண்டன உரை ஆற்றினார்.

மாநில அமைப்புச் செயலாளர் மோ.எல்லாளன், மாவட்ட பொருளாளர் பாஸ்கரன், மாவட்ட துணைச் செயலாளர் சுடர்மணி மாவட்ட செய்தித்தொடர்பாளர் மூ.ஆதிவளவன், மாவட்ட அமைப்பாளர்கள் ரவி, சேட்டு,ஆதி,ஜான்சன்,ராஜேந்திரன், ஜேம்ஸ்வளவன்,கண்ணன், விஜயன்,காளிதாஸ்,ராமதாஸ்,கிருஷ்ணமூர்த்தி மற்றும் பெண்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருகிவரும் தெருநாய்களை கட்டுப்படுத்த கோரிக்கை



கன்னியாகுமரி, ஏப்.9

கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டியில் வீட்டின் படிக்கட்டில் அமர்ந்த மூன்று வயது பெண் குழந்தை கடித்து குதறிய தெரு நாய் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதி இதேபோன்று நாகர்கோவில் அருகே மாநகராட்சி ஊழியர் சென்ற இரு சக்கர வாகனத்தின் குறுக்கே நாய் பாய்ந்ததால் கீழே விழுந்து சம்பவ இடத்திலேயே மாநகராட்சி ஊழியர் சுடலைமணி என்பவர் பலியானார். கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் கடந்த ஜனவரி,பிப்ரவரி ஆகிய இரு மாதங்களில் மட்டும் 4533 பேர்கள் நாய்கடியால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர் இது கடந்த நான்கு ஆண்டுகளில் 52 ஆயிரம் பேர் நாய் கடிக்கு மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தரப்பில் அதிர்ச்சி தகவல் இதற்கு சமூக ஆர்வலர்கள் அரசு சுகாதார நிலையில் நாய்கள் கடிக்கு மருந்து இருப்பு இல்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

# போடிநாயக்கனூர் அகமலை கிராமத்தில் இன்று மக்கள் தொடர்பு திட்ட முகாம்



போடி, ஏப்.9

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், அகமலை கிராமத்தில் மாவட்ட ஆட்சியரின் மக்கள் தொடர்பு திட்ட முகாம் (09.04.2025) இன்று நடைபெற உள்ளது.

தேனிமாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், அகமலை கிராமத்தில் 09.04.2025 புதன் கிழமையன்று காலை 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற உள்ளது. போடிநாயக்கனூர் வட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள், தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை (பட்டா மாறுதல், முதியோர் உதவித்தெகை கோருதல், புதிய குடும்ப அட்டை கோருதல், ஆதி திராவிடர் நலத்துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, விபத்து நிவாரணம், விவசாயத்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் இதர துறைகள்) 09.04.2025 இன்று அகமலை கிராமத்தில் நடைபெறும் மக்கள் தொடர்பு திட்ட முகாமில் நேரில் மனுவினைக் கொடுத்து பயன்பெற்றுக் கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜித் சிங் தெரிவித்துள்ளார்கள்.

# கம்பத்தில் திமுகவினர் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



கம்பம் ஏப்.9:

கம்பத்தில் திமுகவினர் ஆளுநர் ஆர்என் ரவிக்கு எதிராக உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதால் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர்.

தேனி தெற்கு மாவட்ட செயலாளர் நா. ராமகிருஷ்ணன் எம் எல் ஏ ஆலோசனைப்படி கம்பம் வடக்கு மற்றும் தெற்கு திமுக சார்பில் உச்சநீதிமன்ற தீர்ப்பினை வரவேற்று வெடிவெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். வடக்கு நகர செயலாளர் எம்.சி.வீரபாண்டியன் கம்பம் தெற்கு நகர பொறுப்பாளர் சி. பால்பாண்டி ராஜா தலைமை தாங்கினார்கள். மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் இரா. பாண்டியன், மாநில செயற்குழு உறுப்பினர் குரு.குமரன் திருமங்கலம் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் டிஸ்கோ அலாவுதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் . நிகழ்வில் மாவட்ட ,நகர , சார்பணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் முகாமில்மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருந்திய தையல் இயந்திரங்களை வழங்கினார்.

# நத்தம் அருகே பணம் வைத்து சூதாடிய 5 பேர் கைது

நத்தம், ஏப். 9

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மற்றும் சுற்றுவட்டார கிராம பகுதிகளில் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் கிருஷ்ணகுமார் உள்ளிட்ட போலீசார்கள் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது முளையூர் பகுதியில் உள்ள புளியந்தோப்பில் ஒரு கும்பல் பணம் வைத்து சூதாடி கொண்டிருந்தனர். பின்னர் அந்த கும்பலை போலீசார் மடக்கி பிடித்து விசாரணை நடத்தியதில் அவர்கள் முளையூரை சேர்ந்த ராமு(35), மாரிமுத்து(55), தமிழ்ச்செல்வம்(50), வைரம்(40), ராசு(55) என்பது தெரியவந்தது. இதையடுத்து நத்தம் போலீசார் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து 5 பேரையும் கைது செய்தனர்.மேலும் அவர்களிடமிருந்து சீட்டு கட்டுகள், ரூ.200 பணம் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் போதைபொருள் தடுப்பு தொடர்பான வாராந்திர ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் நடைபெற்றது.உடன் உதவி ஆணையர் (கலால்) செல்வி, மாவட்ட மேலாளர் (டாஸ்மாக்) பண்டாரிநாதன், நியமன அலுவலர் (உணவுபாதுகாப்பு துறை) மரு. விஜயலலிதாம்பிகை மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# உச்ச நீதிமன்ற தீர்ப்பை வரவேற்று தென்காசியில் திமுகவினர் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



தென்காசி, ஏப்ரல்: 09

மாநிலங்களில் செயல்படும் பல்கலைக்கழகங்களுக்கு தற்போது வரை மாநில ஆளுநர்களே வேந்தர்களாக நியமிக்கப்பட்டு வந்தனர். ஆளுநருக்கு பதிலாக பல்கலைக்கழக வேந்தர்களாக அந்தந்த மாநில முதல்வரே வேந்தர் பதவி ஏற்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி திமுக சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப் பட்டிருந்தது.

இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் மாநில முதல்வர்களே பல்கலைக்கழக வேந்தராக பொறுப்பேற்கலாம் என்று தீர்ப்பு வழங்கியதை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட செயலாளர் ஜெயபாலன் தலைமையில் குத்துக்கல்வலசை பகுதியில் பட்டாசு வெடித்து பொதுமக்கள் மற்றும் பேருந்து பயணிகளுக்கு இனிப்பு வழங்கி கொண்டாட்டம்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் கனிமொழி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஜே கே ரமேஷ், பொன் செல்வன், தென்காசி கிழக்கு ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம், மேலகரம் பேரூர் கழகச் செயலாளர் சுடலை, கடையநல்லூர் நகர மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான், செங்கோட்டை நகர செயலாளர் வெங்கடேசன், மாவட்டத்துணைச்செயலாளர் கென்னடி, தகவல் தொழில் நுட்ப அணி அழகு தமிழ், வழக்கறிஞர் அணி ரகுமான் சாதத், அழகான ராமராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள்

# தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர்கள் சங்கம் சார்பில் கருப்பு சட்டை அணிந்து ஆர்ப்பாட்டம்



தேனி ஏப்.9

தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர்கள் சங்கத்தினர் சார்பில் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழைவாயில் முன்பு கருப்பு சட்டை அணிந்து தேனி மாவட்ட தலைவர் மகாலிங்கம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.மாவட்ட செயலாளர் அய்யனார் வரவேற்புரையாற்றினார். மாவட்ட சிறப்பு தலைவர்கள் பன்னீர்செல்வம்,அழகர்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில பொருளாளர் பொன் அமைதி ஆர்ப்பாட்டம் குறித்து விளக்க உரையாற்றினார்.தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர்களின் 30 அம்ச கோரிக்கைகளான “குடும்ப அட்டைதாரர் விரல் ரேகை பதிவு மற்றும் ஆதார் சரிபார்ப்பு 40 சதவீதத்திலிருந்து 90 சதவீதமாக உயர்த்தியதை ரத்து செய்து மீண்டும் 40 சதவீதமாக விரல் ரேகை பதிவை நடைமுறைப்படுத்த கோரியும்,இணையதள சேவையை மேம்படுத்த கோரியும்,நியாய விலைக் கடை பணியாளர்களுக்கு கல்வித்தகுதிக்கு ஏற்ப ஊதியம் வழங்க கோரியும்,பொது விநியோகத் திட்டத்திற்கு தனித்துறை அமுல்படுத்த கோரியும்,அத்தியாவசிய பொருள்கள் அனைத்தும் சரியான எடையில் தரமான பொருட்களை பொட்டலமாக வழங்க கோரியும் மற்றும் பணியாளர்கள் மீது சர்வாதிகார போக்கை கடைபிடிக்கும் தேனி கூட்டுறவு விற்பனை சங்க செயலாட்சியர் மற்றும் துணை பதிவாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க கோரி“ கண்டன கோஷங்கள் எழுப்பினர்.இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர் சங்கத்தின் மாநில செயலாளர்கள் காமாட்சி முருகேசன்,அல்லிநகரம் பாண்டி,மாவட்ட நிர்வாக அமைப்பு செயலாளர் ஜெயபிரகாஷ்,மாவட்ட போராட்ட குழு தலைவர் குருசாமி,மகளிர் அணி மாவட்ட தலைவர் ஆர்த்தி,மாவட்ட செயலாளர் சிவகாமி ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசினர். ஆர்ப்பாட்டத்தில் நிர்வாகிகள் உள்பட 200க்கும் மேற்பட்ட தேனி மாவட்ட பணியாளர்கள் கருப்புசட்டை அணிந்துகலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் முடிவில் மாவட்ட பொருளாளர் முத்துராயர் நன்றி கூறினார்..

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161